# திரு ஹச்.ஈ. புஜார் உஸ்மானி, வடக்கு மாசிடோனியா குடியரசின் வெளியுறவு துறை அமைச்சரின் இந்தியாவிற்கான அதிகாரப்பூர்வ வருகை, (ஆகஸ்ட் 31- செப்டம்பர் 01, 2023)

செப்டம்பர் 02, 2023

வடக்கு மாசிடோனியா குடியரசின் வெளியுறவு அமைச்சர் திரு ஹச்.ஈ. புஜார் உஸ்மானி அவர்கள், 2023 ஆகஸ்ட் 31 முதல் செப்டம்பர் 01 வரை இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டார். அவருடன் வடக்கு மாசிடோனியா அரசாங்கத்தின் மூத்த அதிகாரிகளும் வந்திருந்தனர்.

2. ஆகஸ்ட் 31, 2023 அன்று, வெளியுறவு அமைச்சர் திரு உஸ்மானி துணை ஜனாதிபதி திரு ஜக்தீப் தன்கரை சந்தித்தார். அதன்பிறகு, வெளியுறவுத்துறை அமைச்சர், டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் வெளியுறவு அமைச்சர் உஸ்மானி ஆகியோர், இந்தியா-மேற்கு பால்கன் உறவுகள், வர்த்தகம், முதலீடுகள், பலதரப்பு ஒத்துழைப்பு, கல்வி, விவசாயம் மற்றும் மக்களிடையேயான உறவுகள் உள்ளிட்ட இருதரப்பு பேச்சுக்களை நடத்தினர். இந்தோ-பசிபிக், உக்ரைன் மற்றும் ஐநா சீர்திருத்தங்கள் உள்ளிட்ட பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் அவர்கள் விவாதித்தனர். துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர், திரு. விக்ரம் மிஸ்ரி வெளியுறவு அமைச்சர் உஸ்மானியை சந்தித்து பேசினார்.

3. 01 செப்டம்பர் 2023 அன்று வெளியுறவு அமைச்சர் உஸ்மானி அன்னை இல்லத்திற்குச் சென்று கொல்கத்தாவில் உள்ள அன்னை தெரசா நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார். அவர் மேற்கு வங்க அரசு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

4. வெளியுறவு அமைச்சர் புஜார் உஸ்மானியின் முதல் இந்தியா விஜயம் இந்தியாவிற்கும் வடக்கு மாசிடோனியாவிற்கும் இடையிலான உறவுகளுக்கு புதிய உத்வேகத்தை அளித்தது.

**புது தில்லி**
**செப்டம்பர் 02, 2023**